7. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் சமுதாய மற்றும் பொது கழிப்பிடத்தில் தேவையான அத்தியாவசிய வசதிகள் மற்றும் பழுதுகளும் சரி செய்ய வேண்டி சுகாதார அலுவலர் அவர்கள் கேட்டுள்ளதற்கிணங்க. விரைவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு (ODF மற்றும் ++ Free) திறந்த வெளி கழிப்பிடம் அற்ற நகராட்சி என சான்றிதழ் வழங்க கள ஆய்வுக்காக வருகை தர உள்ளதால், இப்பணியை அவசரமாகவும், அத்தியாவசியமாக கருதி மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கள ஆய்வு மேற்கொண்டதில் ஒவ்வொரு கழிப்பிடத்திலும் பெயர் பலகை பெயிண்ட் கொண்டு எழுதப்பட வேண்டும். மேலும் தண்ணீர் வசதி. மின் விளக்கு வசதி, வாஷ் பேசன் வசதி கழிவறை கதவுகள், மாற்றி அமைத்தல் மற்றும் பழுதான கதவுகள் பழுது நீக்குதல். பழுதான இண்டியன் கிளஸ்அவுட், யூரோப்பியன் கிளாஸ்அவுட். மாற்றி அமைத்தல். பழுதான சுவர்கள் மற்றும் தரை தளம் பழுது நீக்குதல். குழாய் பழுதுகள் நீக்குதல். போன்ற அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.4,50,000/–க்கு பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1 . மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்காண் செலவின தொகை ரூ.4,50.000/–னை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1120**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் ஒலி, ஒளி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம் 05.07.2022 முதல் 04.07.2025 வரை மூன்று ஆண்டுகளுக்கு திருமதி. டி. நிர்மலா க/பெ தங்கராஜ் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது, மேற்படி குத்தகை காலம் 04.07.2025 உடன் முடிவடைவதால் ஒப்படைக்கு நாள் முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2560/2023/அ3)

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1121**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 01.08.2022 முதல் 31.07.2025 வரை மூன்று ஆண்டுகளுக்கு திரு. வி. மாரியப்பன் த/பெ வையாபுரி என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி குத்தகை காலம் 31.07.2025 உடன் முடிவடைவதால் ஒப்படைக்கு நாள் முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2560/2023/அ3)

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1122**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் நவீன கட்டண கழிப்பிடத்தில் சுங்கக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 05.07.2022 முதல் 04.07.2025 வரை மூன்று ஆண்டுகளுக்கு திருமதி. வி. மகாலட்சுமி க/பெ வெங்கடேஸ்வரன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது, மேற்படி குத்தகை காலம் 04.07.2025 உடன் முடிவடைவதால் ஒப்படைக்கு நாள் முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2560/2023/அ3)

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1123**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பூரணி நகர் பகுதியில் உள்ள குடிநீர் மேல்நிலை தொட்டியின் (2.00 இலட்சம்) அடி பகுதியில் நீர் கசிவு ஏற்படுவதை சரி செய்து தரும் பணிக்கு 12.02.2025 இல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

விலைப்புள்ளிகளின் விவரம்

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | M/S. சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ்<br>13பி, முத்து வேலப்பன் வீதி<br>கோபிசெட்டிபாளையம் | 21,500 |
| 2. | திரு.C.C. ரமேஷ் PPM நகர்,<br>புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம் | 23,000 |
| 3. | Explosive Entre Price<br>21/9, PMK Rice Mill Road<br>கோபிசெட்டிபாளையம் | 25,000 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் இறுதி செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரூ.21,500/– அளித்துள்ள M/S சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் 13பி, முத்து வேலப்பன் வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களின் விலைப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1124**

12. நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் KNMT கடை எண்: 08 (வரி விதிப்பு எண். 057/8D01/00079) கொண்ட கடைக்கு 16.08.2023 முதல் 15.08.2026 வரையில் திரு, அங்குராஜ் என்பவருக்கு மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி நபர் கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் மேற்படி கடையினை மார்ச் 2025 முதல் நகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார். மேலும் உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 06.02.2025 ம் தேதிய குறிப்பில், மேற்படி குத்தகைதாரர் திரு.அங்குராஜ் என்பவர் கடையினை தொடர்ந்து நடத்த இயலாததால் மேற்படி கடையினை 31.03.2025 முதல் நகராட்சி வசம் எடுத்துகொண்டு நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பின்படி, புதிய பேருந்து நிலையம் KNMT கடை எண் 08 (வரி விதிப்பு எண். 057/BD01/00079) கொண்ட கடைக்கு திரு. அங்குராஜ் என்வருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.03.2025 ஆம் தேதியுடன் ரத்து செய்யவும். 01.04.2025 ஆம் தேதி முதல் மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3060/2016/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1125**

13. நகராட்சிக்கு சொந்தமான IUDP வாரசந்தை கடை எண் 17 (வரி விதிப்பு எண். 057/546 ) கொண்ட கடைக்கு 01.04.2016 முதல் திரு. ஜி. சுப்பிரமணியம் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் 3103.2025 உடன் நகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்

உதவி வருவாய் அலுவலர் தனது 03.03.2025 ஆம் தேதிய குறிப்பில் மேற்படி திரு.ஜி. சுப்பிரமணியம் என்பவர் 2016 ஆம் ஆண்டு வாடகை உயர்வு செய்தது தொடர்பாக வழக்கு மேற்கொள்ளப்பட்டு மேற்படி வழக்கு நகராட்சிக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து மேற்படி குத்தகைதாரர் நிலுவைத் தொகை ரூ.4.09.935/–(2024–2025 அக்டோபர் மாதம் வரை செலுத்தியுள்ளார். மேலும் கோவிட் 19 பொது ஊரங்கு காலங்களில் மற்ற கடை குத்தகைதாரர்களுக்கு வழக்கப்பட்டவாறு 5 மாத வாடகையை தள்ளுபடி செய்து வழங்கவும் மேற்படி கடையினை 31.03.2025 உடன் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்வதாகவும் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பின்படி, வாரசந்தை கடை எண் 17 (வழி விதிப்பு எண் 057/546 ) கொண்ட கடைக்கு திரு.ஜி. சுப்பிரமணியம் என்வருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.03.2025 ஆம் தேதியுடன் ரத்து செய்யவும், 01.04.2025 ஆம் தேதி முதல் மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3060/2016/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1126**

14. நகராட்சிக்கு சொந்தமான MUDF பழைய பேருந்து நிலைய கடை எண்.48 (வரி விதிப்பு எண். 057/BD01/00051) கொண்ட கடைக்கு 05.05.2022 முதல் 04.05.2025 வரையில் திரு.J. தனபால் என்பவருக்கு மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி குத்தகைதாரர் கடையினை 31,03,2025 உடன் நகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்

உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 03.03.2025 ஆம் தேதிய குறிப்பில், மேற்படி கடையினை 31.03.2025 முதல் நகராட்சி வசம் எடுத்துக் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என் தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்கள் குறிப்பின்படி திரு. J. தனபால் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.03.2025 ஆம் தேதியுடன் ரத்து செய்யவும், 01.04.2025 ஆம் தேதி முதல் மேற்படி கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1127**

15. நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை கடை எண் 31 (வரி விதிப்பு . 057/BD01/00087) கொண்ட கடைக்கு 01.03.2024 முதல் 28.02.2027 திரு. A.S. பொன்னுசாமி என்பவருக்கு மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி குத்தகைதாரர் கடையினை தொடர்ந்து நடத்த இயலாததால் 31.03.2025 உடன் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார்.

உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 03.03.2025 ஆம் தேதிய குறிப்பில், மேற்படி கடையினை 31.03.2025 முதல் நகராட்சி வசம் எடுத்துக் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்கள் குறிப்பின்படி, திரு. A.S. பொன்னுசாமி த/பெ.சக்திவேல் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.03.2025 ஆம் தேதியுடன் ரத்து செய்யவும். 01.04.2025 ஆம் தேதி முதல் மேற்படி கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1128**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய தூய்மை பாரத திட்ட நவீன கட்டண கழிப்பிடத்தில் சுங்கக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 05.07.2023 முதல் 04.07.2026 வரை மூன்று ஆண்டுகளுக்கு திரு.எப்.ஜெமேசா என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது. மேற்படி குத்தகைரார் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் மேற்படி குத்தகை இனத்தை தொடர்ந்து நடந்த இயலாத காரணத்தால் 04.07.2025 உடன் நகராட்சி வசம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளர், உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 12.03.2025ம் தேதிய குறிப்பில் மேற்படி குத்தகை இனத்தை நகராட்சி வசம் ஏற்றுக் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளி கோரலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பின் படி மேற்படி குத்தகை இனத்தை 04.07.2025 லிருந்து ஒப்படைக்கும் நாள் முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றம் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும். செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1129**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2024–2025ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 04.03.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு தேவையான படிகாரம் (ALUM) 10 டன்கள் வாங்குதல் | 1,36,998 | M/s.Explosive Entreprises ஒப்பந்ததாரர் | 0.52% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s V. தங்கராஜீ ஒப்பந்ததாரர் | 2.07% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.Explosive Entreprises அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது. தீர்மான எண் . 1130**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் ஆற்று நீரேற்றும் நிலையத்தில் 120HP மோட்டார், கிளீயர் வாட்டர் நிலையத்தில் 180 HP மோட்டார், மற்றும் II rd Scheme ல் 70 HP மோட்டார் இயங்கி கொண்டு உள்ளது. இவற்றிற்கு வரும் மின் சப்ளையானது 500KVA Trans former (HT/LT) ல் இருந்து வருகின்றது. இதில் 500 KVA Transformer இரண்டு எண்கள் உள்ளது. Transformer ஐ ஒன்றன் பின் ஒன்றாக மாற்றி 24 மணி நேரமும் இயக்கப்பட்டு வருகின்றது. Transformer ல் உள்ள HT & LT சைடு புஸ்கள் அதிக வெப்பத்தினால் பழுதடைந்து Transformer மேலே உள்ள HT சைடு AB Suitch பழுதாகி உள்ளது. ஆகவே மேற்படி இரண்டு Transformer உள்ள பழுதுகளை நீக்கி Transformer Oil சர்வீஸ் செய்து கொடுக்க மதிப்பீட்டு தொகை ரூ.5,20,000/– ஆகும். தற்பொழுது கோடை காலம் வருவதால், குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுதுகளை நீக்கி குடிநீர் சீராக கொடுக்க வேண்டியுள்ளதால், அச்செலவின தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1 மன்றம் அனுமதி அளிக்கலாம்,

2. மேற்காண் செலவின தொகை ரூ.5,20,000/-னை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1131**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் இயங்கி கொண்டு உள்ள III rd Scheme 75 HP மோட்டார் பம்பு I & II First சர்வீஸ் செய்து இயக்கவும், மற்றும் ஆற்று நீரேற்று நிலையத்தில் உள்ள 120 HP மோட்டார் ஸ்டார்டர் MCCB I & II பழுதானதை புதியதாக மாற்றி இயக்கவும், குளோரின் பிளாண்ட் 1,2,3 பஸ்ட்களை சர்வீஸ் செய்து இயக்கவும் மதிப்பீட்டு தொகை ரூ.5,50,000/-ஆகும். எனவே, அச்செலவின தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1 மன்றம் அனுமதி அளிக்கலாம்,

2. மேற்காண் செலவின தொகை ரூ.5,50,000/-னை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1132**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்றும் நிலையம் மூலம் வழங்கப்படுகிறது. அங்கு ரா.வாட்டர் மின் மோட்டார் 120HP மற்றும் கிளீயர் வாட்டர, மின் மோட்டார் 180 HP திறன் இயக்கப்படுகிறது. ரா. வாட்டர் ஆற்று தண்ணீர் சுத்தம் செய்வதற்கு 6 எண்ணிக்கை பில்டர் மீடியா உள்ளது. சுத்தம் செய்த குடிநீர் Chemical முறையில் சுத்திகரிப்பு செய்வதற்கு குளோரின் பிளாண்ட் 2 எண்ணிக்கை உள்ளது. Chlorine Liquid Gas சிலிண்டர் மூலம் பொருத்தப்பட்டு Pre Chlorinection மற்றும் Post Chlorination முறையில் குயோரின் கலந்து நகர பகுதிகளில் உள்ள மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு தினமும் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. 20 நாட்கள் வீதம் 2 சிலிண்டர் தேவைப்படுகிறது வருடத்திற்கு 36 சிலிண்டர் தேவைப்படுகிறது. 2025-2025 ஆம் ஆண்டு குளோரின் கேஸ் வாங்க மதிப்பீடு ரூ.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, அத்தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1 மன்றம் அனுமதி அளிக்கலாம்,

2. மேற்காண் தொகை ரூ.10,00,000/-னை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1133**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்கு 267 எண்ணிக்கை சிறு விசை மின் மோட்டார்கள் இயக்கப்படுகிறது. இவைகள் வார்டு எண் 1 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் அல்லாத பிற உபயோக பயன்பாட்டிற்கு இயக்கப்படுகிறது. 1.00HP முதல் 5.00 HP வரை சப்மர்சபின் மின் மோட்டார்கள் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் இயக்கப்படுகிறது. இவைகள் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள் மின் மோட்டார்ர காயில் ரீ வைண்டிங் செய்தல் பம்பு உதிரி பாகங்கள் பொருத்துதல், ஸ்டார்டரில் ஏற்படும் பழுதுகள், மின் உபகரணங்கள் பொருத்துதல் ஆகிய பணிகள் அவ்வப்பொழுது சரி செய்து இயக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணிகள் 2025-2026 ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.10.50 இலட்சம் ஆகும். அச்செலவின தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1 மன்றம் அனுமதி அளிக்கலாம்,

2. மேற்காண் செலவின தொகை ரூ.10.50/-இலட்சத்தினை கநராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1134**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகத்திற்கு ஜனவரி 26, 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு 3 தினங்கள் அலங்கார மின் விளக்குகள் அமைக்கப்பட்டதற்கும், ஜனவரி 26 அன்று ஒலிபெருக்கி அமைக்கப்பட்டதற்கும் செலவின தொகை ரூ.25,900/-க்கான பில் பட்டியல் தொகை

நந்தினி ஆடியோஸ் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1 மன்றம் அனுமதி அளிக்கலாம்,
2. மேற்காண் செலவின தொகை ரூ.25,900/—னை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1135**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண் 15இல் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இதில் நான்கு வகுப்பறைகள் கட்டப்பட்டு உள்ளது. இதற்கு Tiles, Weatheing Cause, Roof Tiles, Painting ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மற்றும் சில வகுப்பறையில் மேற்கூரை சேதம் அடைந்துள்ளது. அவற்றினை சரி செய்ய வேண்யுள்ளது. இதனால் புதியதாக கட்டப்பட்ட நான்கு வகுப்பறைகளுக்கும் மற்றும் இதர சில வகுப்பறைகளுக்கு மராமரத்து பணிகளும் மேற்கொள்ள ரூ.15.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே அத்தொகையினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,
2. மேற்காண் தொகை ரூ.15.00/—இலட்சத்தினை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1136**

24. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள பொறியியல் பிரிவில் திருப்பூர் மண்டலம் மற்றும் சென்னை தலைமை அலுவலகங்களுக்கு அறிக்கைகள் மற்றும் தினசரி Report கள் அனுப்ப வேண்டியுள்ளது. மேலும் திட்டப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்ய வேண்டயுள்ளது. மேலும் பணி நடைபெறும் பொழுது கண்காணிக்க பணி ஆய்வர் தேவைப்படுகின்றனர். நகராட்சியில் பணி ஆய்வர் 4 பணியிடமும் காலியாக உள்ளது. இதனால் இப்பணிகள் அனைத்தும் பாதிப்படைகிறது. இதனால் நகராட்சிக்கு 2 தொழில்நுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணி அமர்த்த ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,
2. மேற்காண் தொகை ரூ.3.50/—இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1137**

25. இந்நகராட்சிக்கு சொந்தமான TN 36 AA 4564 கழிவு நீர் வாகனத்தின் பேட்டரி பழுதடைந்து விட்டதால் புதியதாக பேட்டரி பொருத்திக் கொள்ளும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 1050 நாள்.31.12.2024 இல் மன்ற ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் பேட்டரி விநியோகம் செய்ய 20.01.2025 தேதியன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விகிதம் வழங்கிய Sri Ragaventhira Automobiles, Gobichettipalyam என்பவரிடம் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 விதி எண் 235(3) ன்படி ரூ.6300/— விலைவிகிதத்தில் புதிய பேட்டரி விநியோகம் செய்ய பணி உத்திரவு வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.968/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. தீர்மான எண் . 1138**

26. இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள Cesspool Tanker Lorry TN 36 BB 2683 வாகனத்தின் முதல் ஆயில் சர்வீஸ் TATA MOTORS–ன் அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் ஏர்பில்டர், ஆயில் பில்டர், டீசல் பில்டர் மற்றும் ஆயில் நிரப்பு சர்வீஸ் செய்த வகையில் தொகை ரூ.8,322/– செலவினம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அத்தொகையினை S.V. MOTORS, GOBICHETTIPALAYAM அவர்களுக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 235 (3) ன் படி செலுத்தியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.121/2025/எச்1 )

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
3. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது. தீர்மான எண் . 1139**

27. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற வணிக நோக்கங்களுக்காக 2024–2025 ஆம் ஆண்டு முதல் தொழில் உரிமக் கட்டணங்கள் திருத்தி நிர்ணயம் செய்து வசூலித்து உரிமம் வழங்கிட நகர்மன்ற தீர்மானம் எண். 728 நாள்.29.12.2023 –ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. திருத்திய உரிம விபரக் கட்டண விபரங்களை பிரசுரம் செய்ய பிரசுரக் கட்டணம் பக்கம் ஒன்றிற்கு ரூ.3000/–வீதம் 18 பக்கங்களுக்கு ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிட ரூ.54000/–ம் தொகையினை அரசு கிளை அச்சகம், சேலம் அவர்களின் அரசு கணக்கில் செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (**ந.க.எண்.2812/2023/எச்**)

**அலுவலகக் குறிப்பு :** தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் படி விதி 235 (3) அட்டவணை II ல் (h)ன் கீழ் பொது நிதியிலிருந்து தொகைசெலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு: ஏற்கப்பட்டது. தீர்மான எண் . 1140**

28. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 18, நேரு வீதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான மயானத்தின் பராமரிப்பு மற்றும் நிர்வகித்தல் போன்றவற்றை கோபி உழவன் ரோட்டரி சங்கம் மேற்கொண்டு வருகிறது. இங்கு இறந்த உடல்களை அடக்கம் செய்தல் மற்றும் எரியூட்டும் பணி உள்ளிட்ட பணிகளை 01.02.2025 ம் தேதி மூன்று மாத காலத்திற்கு கோபி உழவன் ரோட்டரி சங்கத்திடம் ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.101/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தலைவர், கோபி உழவன் ரோட்டரி அவர்களுக்கு 01.02.2025 முதல் 30.04.2025 முடிய பராமரிப்பு பணியினை மேற்கொள்ள அனுதித்ததை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது. தீர்மான எண் . 1141**

29. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகளை வெளிக்கொணர்வு முறை மூலம் தூய்மை பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள நகர்மன்றம் ஏற்கனவே தீர்மான எண். 589 நாள். 30.08.2023 இல் அனுமதி வழங்கி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பணியின் ஒப்பந்தகாலம் 05.03.2025 ஆம் தேதியுடன் முடிவடைவதால் இப்பணியினை பள்ளி மாணவ – மாணவியர்களின் பொது சுகாதார நலன் கருதி 06.03.2025 முதல் 60 பள்ளி வேலை நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ.7.20/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1830/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பள்ளியின் பொதுசுகதார பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர்

அவர்களின் முன் அனுமதி பெற்று 06.03.2025 முதல் 60 பள்ளி வேலை நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்ததை மன்றம் ஏற்கலாம்

3. இதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது. தீர்மான எண் . 1142**

30. தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் மொடச்சூர் வாரச்சந்தையில் செயல்பட்டு வரும் வீடற்றவர்களுக்கான தங்கும் விடுதி தற்பொழுது M/s. Atchayam Trust, Erode என்னும் தன்னார்வ அமைப்பினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி அமைப்பிற்கு வழங்கப்பட்ட அனுமதி காலம் வரும் 31.01.2025 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் M/s. Atchayam Trust, Erode அவர்கள் மேற்படி விடுதியினை பராமரிப்பதற்கான மேற்படி இல்லத்தில் தங்கியுள்ள வீடற்றவர்களின் நலன் கருதி தங்கும் விடுதியின் பராமரிப்பு பணியினை 01.02.2025 முதல் மூன்று மாத காலத்திற்கு நிர்வாக நலன் கருதி M/s. Atchayam Trust, Erode அவர்களுக்கு கால நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1508/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று01.02.2025 முதல் 30.04.2025 முடிய M/s. Atchayam Trust, Erode அவர்களுக்கு மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்ததை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது தீர்மான எண் . 1143**

31. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல், புகை மருந்து தெளித்தல், நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s. L.D. Man Power Solutions, Vellore - 638 602 என்னும் நிறுவனத்தினரிடம் தினமும் 37 கொசுபுழு தடுப்பு பணியாளர்களை (DBC Workers) பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் நோய்த் தடுப்பு பணியின் ஒப்பந்தகாலம் 31.01.2025 ஆம் தேதியுடன் முடிவடைவதால், நகரின் பொதுசுகாதார நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.02.2025 முதல் மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த காலத்தினை காலநீட்டிப்பு செய்து கொள்ளவும்,

ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.562/- என்னும் விலை விகிதத்தில் தொடர்ந்து அந்நிறுவனத்தினரிடமிருந்து கொசுபுழு தடுப்பு பணியாளர்களை பெற்று நோய் தடுப்பு பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 15.76 /- இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1018/2024/எச்1)

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
3. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது. தீர்மான எண் . 1144**

32. இந்நகராட்சியின் ஆர்.ஆர்.சி மையத்தில் இயங்கி வரும் இரண்டு பேலிங் இயந்திரத்தின் வால்வுகள், சிலிண்டர் கிட், ஷாப்ட் போன்றவைகள் பழுதாகி உள்ளதால், அதனை மாற்றி ஆயில் சர்வீஸ் செய்து தொடர்ந்து பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள ரூ.45000/- ஆகும் என மதிப்பிடப்படுகிறது. இச்செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 2177/2023/எச்1)

**அலுவகக்குறிப்பு.** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1145**

33. இந்நகராட்சி பகுதியில் உள்ள RRC மையத்தில் உள்ள கரட்டூர் வளமீட்பு மையத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு அரியலூர் Ultra Tech மற்றும் Dalmia சிமெண்ட் ஆலைகளுக்கும், Trichy Dalmia Cement ஆலைக்கும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகள் மூலம் அனுப்பி வைத்திட வாடகைக்கு அமர்த்தும் முறையில் லாரிகளை விநியோகம் செய்யும் பணிக்கு 21.01.2025 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனம் விபரம் | ஒரு டன் (1000 Kg) பிளாஸ்டிக்கழிவுகளை சரக்கு ஏற்றிச் செல்லும் லாரிகள் மூலம் சிமெண்ட் ஆலையில் ஒப்படைப்பதற்கான ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | Rajan Sathiskumar,<br>Sri Balaji Transport,<br>28-G Krisnarao 3rd Street,<br>East Govindapuram,<br>Dindigul-631001. | ரூ. 1850 /- |
| 2. | M/S.Explosive Enter Prises,<br>12 PMK Rice Mill Street,<br>Pudupalayam,<br>Gobichettipalayam. | ரூ. 1700 /- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2- ல் கண்டுள்ள M/S.Explosive Enter Prises, 12 PMK Rice Mill Street, Pudupalayam, Gobichettipalayam.என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2861/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது. தீர்மான எண் . 1146**

34. இந்நகராட்சியின் கோடீஸ்வரா நகர் பகுதியில் கழிவு நீர் கால்வாய் இல்லாததால் கழிவுநீர் செல்ல ஏதுவாக JCB வாகனம் கொண்டு பைப் லைன் அமைத்து குழி போட்ட வகையில் தொகை ரூ-4900/- செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை துப்புரவு ஆய்வாளர் திரு.மூ.நிருபன் சக்ரவர்த்தி அவர்கள் செலுத்தி அசல் ரசீது சமர்ப்பித்து உள்ளார். அவருக்கு தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.222/2025/எச்1 )

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1147**

35. இந்நகராட்சியில் உள்ள 30 வார்டுகளிலும் உள்ள வீடுகள், கடைகள், நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் தினமும் உருவாகும் கழிவுகளை தரம் பிரித்து சேகரித்து செயலாக்கம் செய்யும் மையங்களில் ஒப்படைக்கும் பணிகளை மூன்றாண்டு காலத்திற்கு மேற்கொள்ள 27.03.2023 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 01.05.2023 ஆம் தேதி முதல் M/s. LD Manpower Solutions, Vellore நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி நிறுவனத்தினரின் இரண்டாம் ஆண்டின் ஒப்பந்த காலம் பணி 30.04.2025 ஆம் தேதியுடன் முடிவடைவடைகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணிகள் திருப்திகரமாக இருந்து வருகிறது. எனவே, ஒப்பந்த நிபந்தனைகளின் படியும் (Tender Conditions, Bid Documents) Agreement–ன் படியும் நகரின் பொதுசுகாதார பணியின் அவசியம் கருதியும் 01.05.2025 முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தத்தினை காலநீட்டிப்பு செய்யவும் முதலாம் ஆண்டின் ஒப்பந்தப்புள்ளி விகிதம் ரூ.5641/– ற்கு 10% கூடுதலாக (Tipping fee) நிர்ணயம் செய்து ரூ. 6769.10 (டன் ஒன்றுக்கு) வழங்கவும் அதற்காகும் செலவினம் ரூ.433.37 இலட்சத்திற்க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.களண்.1609/2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் அல்லது SWM TIED GRANT SANCTIONED UNDER 15th CFC லிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1148**

36. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 2025 – 2026 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் கீழ்காணும் விபரப்படியான பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (**ந.க.எண். 444/2021/எச்1)**

| **வ. எண்** | **விபரம்** | **உத்தேச செலவினம் இலட்சத்தில் ரூ.** |
|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் இதர தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கு சீருடைகள், தையல் கூலி மற்றும் காலணிகள் கொள்முதல் செய்து கொள்ள ஆகும் செலவினம் | 4.00 |
| 2 | பொது சுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள வாகனங்கள் பழுதுப் பணிகள் செய்ய (தகுதிச்சான்று புதுப்பித்தல் பணிகள் உட்பட), டயர் டியூப், பேட்டரி வாங்க, சாலை வரி, காப்பீட்டு தொகை மற்றும் பசுமை வரி செலுத்த ஆகும் செலவினம் | 10.00 |
| 3 | பொது சுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள வாகனங்களை இயக்குவதற்கும் கொசு ஒழிப்பு பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் புகைத்தெளிப்பான் இயந்திரங்களுக்கும், கொசு மருந்துடன் டீசல் கலந்து தெளிக்க தேவைப்படும் எரிபொருட்களான டீசல், பெட்ரோல், ஆயில் மற்றும் கிரீஸ் போன்றவற்றினை அரசு நிர்ணயம் செய்யும் விலைவிகிதத்தில் நிதி ஆண்டில் கொள்முதல் செய்ய ஆகும் செலவினம் | 18.00 |
| 4 | பொது சுகாதாரப்பிரிவு நாளிதழ் விளம்பரக் கட்டணம் மற்றும் வழக்குக் கட்டணம் ஆகும் செலவினம் | 1.00 |
| 5 | புற ஆதார முறையில் கல்வி நிதியில் நகராட்சி பள்ளி கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகங்களை தூய்மைப்படுத்தும் பணிக்கு ஆகும் செலவினம் | 30.00 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1149**

37. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனம் பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள நகராட்சி மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் எதிர்வரும் 30.10.2025 உடன் மூன்றாண்டுகள் குத்தகை உரிம காலம் முடிவடைந்து மேற்படி குத்தகை இனம் மன்றத்தின் அனுமதி பெற்று மேலும் 01.11.2024 முதல் 31.03.2025 வரை 5 மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள குத்தகைதாரர்களுக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது தற்போது உதவி வருவாய் அவர்களின் 13.03.2025 ம் தேதிய குறிப்பில் தற்போதைய

உரிம நீட்டிப்பு காலம் முடிவடைவதால் மேற்படி விண்ணப்பதாரர் அவர்களின் விண்ணப்பத்தின் பேரில் 01.04.2025 முதல் 30.04.2025 வரை மேலும் ஒரு மாதத்திற்கு உரிம காலத்தை நகர்மன்றத்தின் அனுமதி பெற்று நீட்டிப்பு செய்யலாம் என தெரிவித்துள்ளர்.

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பின் படி மேற்படி பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள மிதிவண்டி நிலையத்திற்கான குத்தகை உரிமத்தினை 01.04.2025 முதல் 30.04.2025 வரை மேலும் ஒரு மாதத்திற்கு நிபந்தனையுடன் குத்தகை உரிமத்தினை நீட்டிப்பு செய் மன்றத்தின் அனுமதி வேண்டபப்டுகிறது,

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1150**

38. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனம் பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள நகராட்சி மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் எதிர்வரும் 30.10.2025 உடன் மூன்றாண்டுகள் குத்தகை உரிம காலம் முடிவடைந்து மேற்படி குத்தகை இனம் மன்றத்தின் அனுமதி பெற்று மேலும் 01.11.2024 முதல் 31.03.2025 வரை 5 மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள குத்தகைதாரர்களுக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது.இந்நிலையில் உதவி வருவாய் அலுவலர் தனது 12.03.2025 ம் தேதிய குறிப்பில் மேற்படி பழைய பேருந்து நிலைய வணிக வளாக கட்டிடம் இடிக்கப்பட்டு புதிதாக கட்டுவது தொடர்பாக நாளவது வரை எந்த ஒரு முகாந்திரமும் கிடைக்கப்பெறாத காரணத்தினால் நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்படி குத்தகை இனத்தினை 01.05.2025 முதல் பொது ஏலம் மற்றும் உப்பந்தப்புள்ளி கோரலாம். என தெரிவித்துள்ளர்

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பின் படி மேற்படி பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள மிதிவண்டி நிலையத்திற்கான குத்தகை உரிமத்தினை நிபந்தனைகளின் அடிப்படையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண். 2560/2023/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1151**

39. 1. இந்நகராட்சியின் மூலம் தெருநாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் பணி (ABC Programme) க்கு அறுவை அரங்கம், நாய்கள் அறை மற்றும் மருத்துவர் அறை தயார் நிலையில் உள்ளதால் இப்பணியினை விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தை தேர்வு செய்து நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்து Rabies தடுப்பூசி போடும் பணிக்கு அரசு நிர்ணயம் செய்த விலை விகிதமான நாய் ஒன்றுக்கு ரூ.1650/– ரேட்டில் பணியினை மேற்கொள்ளவும் இப்பணிக்கு ஆகும் உத்தேசசெலவினம் தொகை ரூ.5.00/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

2. நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கு நகராட்சி மூலம் உரிமம் பெறப்பட வேண்டும். ஒரு நாய்க்கு ரூ. 250/– நிர்ணயம் செய்து நிபந்தனைகளுக்கு உரிமம் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2177/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. ABC பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு: 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1152**

40. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை வணிக வளாக IUDM கடைகளுக்கு 18.02.2024 ஆம் தேதியன்று முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடை பெற்ற கடைகள் :

1. தினசரி சந்தை IUDM கடை எண். A.03, , A.06, A.08, A.11, G.1 மற்றும் கடை எண். G.2 (6 கடைகள்)

மேற்படி 6 கடைகளுக்கு நடைபெற்ற முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. ஒரே ஒரு கடைக்கு மட்டும் இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர். விபரம் பின்வருமாறு.

| வ. எண் | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.11** | திருமதிஅம்சவேணி<br>த/பெ. ஈஸ்வரன்<br>11, மடாலயம் ரோடு<br>சரவணம்பட்டி<br>கோயமுத்தூர் | ரூ.15,100/- |
| | | திரு.எஸ், சுந்தரமூர்த்தி<br>22பி பெரியார் நகர்<br>நாயக்கன்காடு<br>கோபிசெட்டிபாளையம்<br>638452 | ரூ.15,200/- |

மேற்கண்ட விபரங்களின் படி,

வரிசை எண். 1 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.11 க்கு, திருமதிஅம்சவேணி என்பவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,100/- ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து, திரு.எஸ், சுந்தரமூர்த்தி என்பவர் ரூ.15,200/- க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ளார்.

உதவி வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 18.02.2025 ஆம் தேதிய குறிப்பில், தினசரி சந்தை IUDM கடை எண். A.11 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,200/- குறிப்பிட்டுள்ள திரு.எஸ், சுந்தரமூர்த்தி என்பவருக்கு மன்றத்தின் அனுமதி பெற்று, கட்டுமான பணிகள் முடிவடைந்தபின் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின்படி, தினசரி சந்தை IUDM கடை எண். A.11 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.15,200/- குறிப்பிட்டுள்ள திரு.எஸ், சுந்தரமூர்த்தி என்பவருக்கு தினசரி வணிக வளாக கட்டுமான பணிகள் முடிவடைந்தபின், ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத மீதமுள்ள ஐந்து கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1272/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண் . 1153**

**(ஒப்பம்)- என்.ஆர்.நாகராஜ்**
**தலைவர்**
**கோபிசெட்டிபாளையம் நகராட்சி**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்.**
**கோபிசெட்டிபாளையம் நகராட்சி**